**SC.No.** 12/2023

**PW** 1- கார்த்திகேயன் த/பெ. கன்னையன்

நாள். 27.06.2023

<u>மனுஅனுமதியின் பேரில் எதிரி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. சம்பவம் நடந்ததாக செல்லப்படும் தேதிக்கு ஒரு வருடம் முன்பு இருந்து தான் எனக்கும் 1ம் எதிரிக்கும் பழக்கம்என்றால் ஆமாம். சமூக நீதிகட்சியின் திருப்பூர் மாவட்ட தலைவர் வீராசாமியின் மனைவி என்னுடைய உறவினர் என்றால் ஆமாம். நான்கொடுத்த புகாரிலும் போலீஸ் விசாரணை வாக்குமூலத்திலும் 1ம் எதிரி சமூகநீதிகட்சயில் என்ன பொறுப்பில் இருக்கிறார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். என்னுடைய வீட்டிற்கும் 1ம் எதிரி வீட்டிற்கும் இடையே ஒரு கிலேமீட்டர் தூரம்இருக்கும் என்றால் சரியல்ல. 5–6 கிலோ மீட்டர் இருக்கும். நான் கொடுத்த புகாரிலும் போலீஸ் விசாரணை வாக்குமூலத்திலும் 2 முதல் 4 எதிரிகளை ஏற்கனவே தெரியும் என்றோ அவர்களது தகப்பனார் பெயர் மற்றும் முகவரி போன்ற முகவரி விவரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன்.

2. அதேபோல் நான்கொடுத்த புகாரிலும் போலீஸ் விசாரணை வாக்குமூலத்திலும் 1வது எதிரி நான் வசிக்கும் பகுதியில் சுமார் 60 நபர்களிடமிருந்து தலா ரூ800 வசூல் செய்துள்ளார் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். மேற்படி தொகையை நான்எந்த தேதியில் எங்கள் பகுதியில் வசிக்கும் மக்களிடமிருந்து வாங்கிக்கொடுத்தேன் என்ற விவரத்தை நான்கொடுத்த புகாரிலும் போலீஸ் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். நானோ என்னுடைய பகுதியில் வசிக்கும் மக்கலோ இந்த வழக்கின் புகாருக்கு முன்பாக தொகையை பெற்றுக்கொண்டு 1ம் எதிரி என்ன நடவடிக்கையும் எடுக்கவில்லை என காவல் துறையில் புகார் எதுவும் அளிக்கவில்லைஎன்றால் ஆமாம். அவருடைய வீட்டில் சென்ற கேட்டோம். எந்த தேதியில் அவ்வாறு 1ம் எதிரி வீட்டிற்கு சென்று கேட்டோம் என்ற விவரத்தை நான்கொடுத்த புகாரிலும் போலீஸ் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரியல்ல 3 நாட்களுக்கு முன்பு கேட்டதாக சொல்லியுள்ளேன். தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை.

3. 3 நாட்களுக்கு முன்பு கேட்டதாக சொல்லவில்லை என்றாலும் தற்போது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1வது எதரி என்னை எந்த அலைபேசியில் இருந்த அழைத்தார் என்ற விவத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம் போன் செய்ததாக சொல்லியுள்ளேன். சம்பவ தேதியில் எனக்கு அழைப்பு வந்ததாகவோ என்னுடைய வீட்டில் சொல்லிவிட்டு கிளம்பியதாக புகாரிலும் போலீஸ் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். டாஷ்மார்க் கடை என்பதும் டாஷ்மார்க் பார் என்பதும் வெவ்வேறு என்றால் சரியல்ல. இரண்டும் ஒன்று தான். சம்பவத்தாக நாங்கள் சென்றதாக சொல்லும் டாஸ்மார்க் கடையானது மெயின் ரோட்டில் இருந்து தள்ளிததான் இருந்தது என்றால் ஆமாம். மேற்படி மெயின் ரோடுக்கும் டாஸ்மார்க் கடைக்கும் 250 மீட்டர் தூரம் இருக்குமா என்றால் 100-150 மீட்டர் இருக்கும். மேற்படி கடையிலிருந்து என்னுடை வீடு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் எங்கே நடந்தது என்ற விவரம் நான் சொல்லிதான் போலீசாருக்கு தெரியும் என்றால் ஆமாம்.

4. சம்பவம் நடந்ததாக நான் சொல்லும் கருபண்ண சாமி கோவில் இடமானது மண்ணரை டு மணியக்காரன் பாளையம் செல்லும் பிரதான சாலையில் இல்லை என்றால் சரியல்ல. நான் புகாரில் குறிப்பிட்டுள்ள குனசேகரன் என்னுடைய உறவினர் என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் அங்கு வந்து நபர்களில் குனசேகரன் என்பவரை வேறு யாரையும் தெரியாது என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து 5 நிமிடத்தில் நடந்து செல்லக்கூடய இடத்தில் Fashion process என்ற நிறுவனம் உள்ளது என்றால் அப்படி எதுவும் இல்லை. போலீசார்என்னை விசாரித்த போது சம்பவ நேரத்தில் நான் அணிந்து இருந்த உடையை நான் ஒப்படைக்கவில்லை என்றால் ஆமாம். அ.த.சா 1 நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தை நான் சொன்னதை கேட்ட பிறகு போலீசார் எழுதினார்களா அல்லது சொல்ல சொல்ல எழுதினார்களா என்றால் ஒவ்வொன்றாக சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள்.

5. நான் முதல் விசாரணையிலும் புகார் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லைஎன்றாலும் எதிரிகளை என்னை ஆபாசமாக பேசியதகாவும் தடுத்து நிறுத்தி எனக்கு மரனத்தை விலைவிக்கும் ்அளவிற்கு காயத்தை ஏற்படுத்தியதாகவும் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய பகுதி மக்களிடம் நான் வசூல செய்த தொகையை நானாக செலவு செய்து விட்டு 1ம்எதிரி மீதும் மற்ற எதிரிகள் மீதும் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் நான் சொல்லும் வழக்குக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.